★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 11உ திங்கள் (23—4—56) ★ ★ வெளியீடு: சித்திரை 12உ செவ்வாய் (24—4—56) [இதழ் 266

குழுக்கள் பற்றி தேஷ்முக்

புதுடில்லி, ஏப். 22—

"கமிட்டிக்களை மட்டும் கணக்குப் பார்த்துவிட்டு, பல மணி நேரத்தை வீணாக்கும் அமைப்புத்தான் குழுக்கள் என்ற கொள்கையை நான் நம்புகிறேன். ஒரு பிரச்சினையை ஒரு குழுவின் ஆராய்ச்சிக்கு விட்டுவிட்டால் ஏறத்தாழ அந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டதாகவே கொள்ளலாம்" என்று நிதி மந்திரி தேஷ்முக் மக்கள் சபையில் கூறினார்.

பல்வேறு காரியங்களுக்காக குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரும் உறுப்பினர்களுக்குப் பதில் தரும்போதே தேஷ்முக் அப்படிக் கூறினாராம்!

மனக்கோட்டை இடிவது கண்டு நேரு குமுறுகிறார்

'இந்தியா ஒரே நாடுதான் என்று எண்ணுங்கள்'

'எல்லோரும் இந்தியர்தான் என்று கருதுங்கள்'

'உள்ள உணர்வுபூர்வமாக ஒன்றுபடுங்கள்'

'எமது மொழி, எமது மாநிலம் என்று பேசாதீர்கள்'

பண்டிதரின் உபதேசமும்-ஓலமும்!

கோரக்பூர், ஏப். 22—

பரந்த உபகண்டமான இந்தியா, என்றென்றைக்கும் உருக்குலையாது, ஒரே நாடு என்று கருதப்பட்டு, நிலைபெற்றுவிட வேண்டும் என்று ஆசைப்படுகிறார், பிரதமர் நேரு!

இங்கு வாழ்வோரெல்லாம், 'இந்தியர்' என்றே தங்களைக் கருதிக்கொள்ளும் நாள் விரைவில் வந்துவிட வேண்டும் என்று மனக்கோட்டை கட்டுகிறார், அவர்!

இந்தியா ஒரே நாடல்ல என்ற உண்மை நிரூபிக்கப்படும் போதும், 'இந்தியர்' என்று எந்த இன—மொழி மக்களும் தங்களைக் கருதத் தயாரில்லை என்னும்போதும், எரிமலையெனக் குமுறுகிறார், அவர்! ஆத்திரத்தை அள்ளிக் கொட்டுகிறார், தன் மனக்கோட்டையைத் தகர்ப்பவர் மீது!

"'எமது மொழி, எமது மாநிலம்' என்று பேசுகிறீர்களே, இந்தியாவின் 'ஒற்றுமை'யைவிட—ஒன்றுபட்ட இந்தியாவைவிட இந்த 'எமது மொழி—எமது மாநிலம்' பெரிதானவையா? பெருமதிப்பிற்குரியவையா? ஏன் இப்படி, 'தனி மொழி—தனி மாநிலம்' என்று அடித்துக்கொள்ளுகிறீர்கள்? இந்தியா என்று எண்ணுங்கள்; எல்லோரும் இந்தியர் என்ற 'ஒற்றுமை' உணர்வைப் பெறுங்கள்—என்று உபதேசம் செய்தவண்ணமிருக்கிறார், அந்த அலகாபாத் பண்டிதர்!

கடந்த எட்டாண்டுக் காலத்திற்கு மேலாக, அவர், தனக்குள்ள ஆற்றல் முழுவதையும் ஒன்று திரட்டி, தனக்குக் கிடைத்துவருவதாக தனது சகாக்களால் கூறப்பட்டுவரும் புகழையும், செல்வாக்கையும் முன்தள்ளி, இந்த 'ஒற்றுமை' உபதேசத்தை இடைவிடாது செய்து வந்திருந்தும், 'இந்தியர்' என்ற எண்ணம், எந்த வட்டார மக்களுக்கும் ஏற்படவில்லை என்பது மட்டுமல்ல—வட இந்தியர், தென்னிந்தியர் என்று எண்ணுகிற இயற்கையான வேற்றுமை எண்ணம் வலுப்பெற்றிருக்கிறது என்பதைக் காணும்போது, தன் உபதேசம் மதிக்கப்படவில்லை என்ற உண்மை கண்ணை உறுத்தும்போது, ஓலமிடுகிறார்—அங்கலாய்க்கிறார்—ஆயாசப்படுகிறார்!

கோரக்பூரில் பேசிய கூட்டம் ஒன்றில் அவர் வழங்கியிருக்கிற கருத்துக்கள், அவரது நீண்டநாளைய மனக்கோட்டை இடிபடுவதினால் அவருக்கேற்பட்டுள்ள கலக்கத்தைத் தெளிவாகக் கூறுவனவாயுள்ளன.

"இப்போது இந்தியாவிற்கு எந்த வெளிநாட்டிலிருந்தும் ஆபத்து வரக்கூடுமென்று நான் கொஞ்சிற்றும் அஞ்சவில்லை. ஆனால் நம்முடைய தவறுகள்—உள்நாட்டில் உள்ள பலவீனங்கள்தான், எனக்கு சந்தேகத்தையும், கலக்கத்தையும் மூட்டுகின்றன," என்று கூறியிருக்கிறார் நேரு!

"இந்தியா, ஒரேநாடுதான் என்று எல்லோரும் உணர வேண்டும். இந்தியாவில் உள்ள குடிமக்கள் அனைவரும், தாங்கள் எல்லோரும் ஒரு குடும்பத்தவர் என்று உள்ள பூர்வமாக—உணர்வு பூர்வமாகக் கருதுகிற ஒற்றுமையைப் பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்," என்று கூறியிருப்பதின் மூலம் இப்போது 'இந்தியா' ஒரே நாடல்ல என்ற எண்ணம் நிலவுவதையும், மக்கள் தங்களை 'இந்தியர்' என்று கருதுகிற உள்ள உணர்வுபூர்வமான ஒற்றுமை இல்லை என்ற உண்மைகளையும் ஒப்பியிருக்கிறார்.

மேலும் அவர் கூறுகிறார்—

"என்றைக்காவது ஒருநாள் இந்த உள்ள உணர்வு பூர்வ

(4-ம் பக்கம் பார்க்க

புதுவை காங்கிரசின் சரிவு

தலைவர் உட்பட 5 பேர் எதிர்க்கட்சியில் சேர்ந்தனர்?

புதுவை, ஏப். 22—

புதுவை மாநிலப் பிரதிநிதித்துவ சபையில் உள்ள காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த நால்வர் எதிர்க்கட்சியில் சேர்ந்து விட்டனர் என்றும், அவர்கள் காங்கிரசிலிருந்து 'இராஜிநாமா'ச் செய்து விட்டனர் என்றும் தெரிய வருகிறது.

மேலும் ஆளும்கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவரான ஆர். எல். புருஷோத்தம ரெட்டியாரும், காங்கிரசிலிருந்து விலகி விட்டதாக நம்பகமாய்த் தெரிய வருகிறது.

39 உறுப்பினர் கொண்ட சபையில் காங்கிரசின் பலம் இப்போது19 உறுப்பினர்கள் மட்டுமே!

கனம் காமராசரின் '5-நாள் திட்டம்'!

சேலம்-தஞ்சையில் மகத்தான வெற்றி!

குடந்தை, ஏப். 22—

இந்தியத் துணைக்கண்டத்தைத் தொழில் மயமாக்குவது என்ற பெயரில் இந்தியப் பேரரசு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டி செயலாற்றி இருக்கிறது. இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்கி இருக்கிறது.

நமது முதலமைச்சர் காமராசர் மட்டும் சும்மா இருப்பாரா? அவரும், தமக்கு விருப்பமானதும், பழக்கமானதுமான 'பிதற்றல்' பணியைத் திட்டமிட்டுச் செயலாற்றத் துணிந்துவிட்டிருக்கிறார். அவ்வரும்பணி 'ஐந்து நாள்' ஏற்பாடு எனத் தகும் வகையில் அமைந்திருக்கிறது. அந்த 'ஐந்து நாள்' ஏற்பாட்டை முதலமைச்சர் முதல் முதலாக சேலம் மாவட்டத்தில் நிறைவேற்றினார். இப்பொழுது, இரண்டாவதாக தஞ்சை மாவட்டத்திற் செயலாற்றி இருக்கிறார்.

தமது 'ஐந்து நாள்' ஏற்பாட்டின் முதல் தாக்குதலாக தி. மு. கழகத்தைத் தூற்றி மகிழும் திருக்கூத்தை, சேலம் மாவட்டத்தில் வெற்றிகரமாக அரங்கேற்றினார், கனம் காமராசர்! தஞ்சையில் நிகழ்த்திய தமது இரண்டாம் தாக்குதலில், தாய்மொழிப் பற்றுடையார் அனைவர்மீதும் வசை உமிழ்ந்திருக்கிறார்!

"மொழியில் தனித்தன்மை கோருவதும், வெறி கொள்வதும் இகழ்ந்து வெறுக்கத் தக்கதாகும்.

"மொழியின்மீது மிகைபட ஆர்வம் கொண்டிருப்பவர்கள் மேற்கொள்ளும் செயல்கள், அவர்களுடைய மூலக் கருத்தையே அழித்துவிடவும் கூடும். குறுகிய நோக்கங் கொண்ட சில இந்தி வெறியர்கள் போன்று, தமிழ் வளர்ச்சியில் கருத்துடையோரும் தவறு செய்யக்கூடாது.

"மற்ற மொழிகளிடத்து அழுக்காறு கொள்ளக் கூடாது. தங்களுடைய மொழி ஆக்கத்திற்கு அது ஒருக்காலும் துணை செய்யாது.

"பல மொழிகளைக் கொண்டது இந்திய நாடு. மொழிகள் அனைத்தும் இணைந்து பரஸ்பரம் வளர்ந்து வாழ்ந்தாக வேண்டும். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் ஒன்றை ஒன்று பற்றிக் கொண்டிருப்பதாகும். தனது மொழியிடத்து ஒருவருக்கு ஆழ்ந்தப் பற்று இருப்பது இயற்கையும் வரவேற்கக் கூடியதுமாகும். ஆனால், அது, பிற மொழிகளைப் பகைக்கும் கூட்டத்தை நெருங்கிவிடக் கூடாது.

"மொழி அடிப்படையில் மாகாணங்கள் அமைக்கப் பட்ட போதிலும் கூட, ஒரே மொழி பேசுகிற மக்களே இடம்பெற்றுள்ள ஏற்பாடாக அம்மொழிவழி அமைப்பு இருக்குமெனக் கருதிக் கொள்ளக்கூடாது.

"ஜனநாயக அமைப்பில், பல திறப்பட்ட பிரச்னைகளிலும் தங்களுக்கெனத் தனித் தனிக் கருத்துக்களைக் கொண்டிருக்க மக்களுக்கு உரிமை உண்டு. ஆனால், அரசியல் கட்சிகளும் கும்பல்களும் வீசும் மாயவலையில் விழுந்து விடாமல், மக்கள் தங்களை எச்சரிக்கையாகப் பாதுகாத்து வரவேண்டும்."

முதலமைச்சர் கனம் காமராசர் அவர்கள், தஞ்சையில் நடத்திய இரண்டாவது தாக்குதலின் உள்ளடக்கந்தான், மேலே தரப்பட்டிருப்பதாகும்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் இரத்த வெறி

ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் பலநூறு விடுதலை வீரர்கள் பலி!

ஒவ்வொரு இருபத்திநான்கு மணி நேரத்திற்கும், நூற்றுக் கணக்கான விடுதலை வீரர்களைப் பலிகொண்டு வருகிறது, அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியம்!

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 178 தீவிரவாதிகளைக் கொன்று குவித்திருக்கின்றனர் என்று கணக்குத் தரப்பட்டிருக்கிறது.

இப்படி ஒவ்வொரு நாளும், பிரெஞ்சு இராணுவத்தினர் சுட்டு வீழ்த்துகிற விடுதலை வீரர்களின் பட்டியல்தரப்பட்டு வருகிறது.

இந்த நிலைமைக்குக் காரணம் என்ன?

புதுடில்லி, ஏப். 21—

"இந்தியில் உயர்தரப் படிப்பிற்கு உதவிச் சம்பளங்கள் ஏற்படுத்த மாறு ஓராண்டிற்கு முன் மத்திய அரசினர் கல்வி இலாகா அனுப்பிய சுற்றறிக்கை சம்பந்தமாக இந்திமொழி பேசப்படாத 18 மாநிலங்களில் 16 மாநிலங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை"

என்று, மக்கள் சபையில் கல்வி இலாகா பார்லிமெண்டரி செயலாளர் டாக்டர் எம் எம். தாஸ் தெரிவித்துள்ளார்.

மே தினம்: விடுமுறை நாளாகப் பிரகடனம்!

கொழும்பு, ஏப். 21—

மே தினம் விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்படும். இங்கல்ல; இலங்கையில்!

இலங்கைத் தொழிலாளர் மந்திரி இலங்காரத்தினம், இந்தத் தகவலை மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

அசாம் பகுதியில் எண்ணெய்க் கிணறுகள்

500 சதுரமைலில் 'சர்வே'

கௌஹாட்டி, ஏப். 21—

அசாம் பகுதியிலுள்ள வித்திரியாவில் 14 எண்ணெய்க் கிணறுகளை 10,470 அடிக்குத் தோண்டியதும் நல்ல பயன்கள் உருவாகக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சென்ற இரண்டாண்டு காலமாகவே இதற்காகத் தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வந்துள்ளதாம்; சுமார் 500 சதுரமைலுக்கு 'சர்வே' நடைபெற்றிருக்கிறதெனத் தெரிய வருகிறது.

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—4—'56 திங்கள்

என்றும் உணரமாட்டார்!

"வெறும் அரசியல் ஒற்றுமை, பொருளாதார விடுதலை பற்றி மட்டுமே எண்ணுவது போதுமானதல்ல என்பது உணரப்படவில்லை. பட்டிழை போன்ற நேசத்தாலும், பாசத்தாலும், ஒருவருடன் ஒருவரை பிணைக்கின்ற மன உறவு குறித்தும், எண்ணிப் பார்த்திடல் வேண்டும்."

அவ்வரிய பொருள் செறிந்த கருத்தை, அகில இந்திய காங்கிரஸ் குழு தலைவர் தேபர் அவர்கள் கூறியுள்ளார்.

பொதுவாக நாட்டு மக்களிடையும், குறிப்பாகக் காங்கிரஸ் கட்சியினரிடையும் நிலவி வரும் மனப்போக்கைக் கண்டே, இவ்வாறு காங்கிரஸ் தலைவர் கூறி இருக்க வேண்டும் என நாம் எண்ணுகிறோம். நாட்டு மக்கள் அனைவர் உள்ளத்திலும், தேபர் அவர்கள் சுட்டிக் காட்டிய உயர்கருத்து இடம் பெறுவதற்குமுன், காங்கிரஸ் முதல் வரிசைத் தலைவர்களிடை இடம் பெற்றாக வேண்டும்.

இன்று, இவ்வுயர்ந்தக் கருத்தைக் கொண்டவர்களாகத்தான், காங்கிரஸ் தலைவர்கள் எனப்படுவோர் ஒவ்வொருவரும் இருக்கின்றனர் எனக் கூற எவருக்கும் துணிவு பிறக்காது.

இக்கருத்து, குடிபுகுந்திருக்கும் இடமாக அவர்களுடைய உள்ளங்கள் இப்பொழுது இருந்திருக்குமானால், அது தேவையன்றோ, அது பற்றி சிந்திக்க வேண்டுமென்றோ, தேபர் அவர்கள் உணர்ந்திருக்கமாட்டார்.

காங்கிரஸ் தலைவர்களுடைய உள்ளங்கள் அக்கருத்தின் உறைவிடங்களாக இருக்குமானால், அக்கருத்து, நாட்டிலும் கூடுமானவரை குறிப்பிட்ட வரம்புக்குள் நிலவி இருப்பதும் எதிர்பார்க்கக்கூடியதே.

தேபர் அவர்கள் சுட்டிக் காட்டும், 'ஒருவருடன் ஒருவரை நேசத்தாலும், பாசத்தாலும் பிணைக்கின்ற மனித உறவின்' தேவை, காங்கிரஸ் தலைவர்களால் உணரப்படாதது மட்டுமின்றி, அத்தகைய உறவு உருவாகவே தேவை இல்லை என்றக் கெடு நினைப்புமன்றோ அவர்கள் கொண்டிருக்கின்றனர்?

அத்தகு நல்லுறவு, ஒரு வேளை, தானாக மெள்ளமெள்ள உருவாவதையும் அன்றோ, தங்கள் வாய்த்துடுக்கால், ஆணவச் செயல்களால் காங்கிரஸ் தலைவர்கள், மந்தி கை மலர் மாலை என அழித்தொழித்து வருகின்றனர்.

அத்தகு மனித நல்லுறவுகருக் கொள்வதற்கான சூழ்நிலையே ஏற்படவிடக் கூடாது என்ற நினைப்பில் அன்றோ, காங்கிரஸ் தலைவர்கள் என்போர், ஒவ்வொரு வகையிலும் செயல்பட்டு வருகின்றனர்.

வரலாற்றின் விசித்திரத்தன்மையின் காரணமாக, அரசியல் துறையில் காங்கிரஸ் கட்சி ஒன்றே ஒன்று மட்டுமே—உள்ளுக்குள் பயங்கரமான பிளவுகளையும் பிணக்குகளையும் உடைத்தாயிருந்தபோதிலும்—புறத் தோற்றத்துக்கு, சீரான கட்சியாகப் பரிணமித்து வருகிறது. காங்கிரஸ் கட்சிக்குள்ள வாய்ப்பும்வசதியும் வளமும் இந்தக் காலக் கட்டத்தில், மற்றக் கட்சிகளுக்கு இருப்பது இயலாது. எனவே, காங்கிரஸ் கட்சியை எதிரடித்து முறியடிக்கின்ற ஆற்றல் மற்றக் கட்சிக்கு இப்பொழுது இல்லாது இருப்பதில் வியப்பு ஏதும் இல்லை.

நாட்டின் அரசியல் துறையில் நிலவிவரும், இப்பலவீனத்தைத் தனக்கு ஒரு புகலாகக் கொண்டு, தான்தான் மக்களின் குரல் என்றும், தன்னால் மட்டுந்தான் மக்களின் குறைகளைக் களையமுடியும் என்றும், காங்கிரஸ் கட்சி தினம் தினம் இறுமாப்புடன் பீத்திக் கொண்டு வருகிறது.

இதுவரை, அக்கட்சி பீத்திக் கொள்வதுபோல், அதன் செயலால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்ன?

அதன் தலைவரே, குறிப்பிடுகிறார்—'ஒருவருடன் ஒருவரை நேசத்தாலும் பாசத்தாலும் பிணைக்கின்ற மனித உறவின் தேவை குறித்து உணரப்பட வேண்டும்'—என்று. இத்துறையில், காங்கிரஸ் கட்சியின் சேவை பயன்படவில்லை என்ற உண்மையைத்தான், தேபர் அவர்களின் கருத்துரை எடுத்துக் காட்டுகிறது.

'நேசத்தாலும் பாசத்தாலும் ஆக்கப்படுகின்ற மனித உறவின் தேவை' இனியாவது காங்கிரஸ் கட்சித் தலைவர்களால் உணரப்படுமா என்றால், அவர்களின் முற்கால-இக்கால நடைமுறை, அதற்கான நம்பிக்கையை ஊட்டுவதாக இல்லை.

அவர்களுடைய சொல்லும், செயலும் எப்பொழுதும்போல், மக்களிடை ஆத்திரத்தையும், உட்பகையையும் மூட்டி வளர்ப்பதாகவே அமைந்திருக்கின்றன.

அவர்களுடைய நோக்கையும், போக்கையும் இனியாவது மாற்றி அமைக்க முடியாதா என்றால், அதற்கும், 'முடியும்' என்ற பதிலை முழு நம்பிக்கையுடன் ஒருவராலும் கூற முடியாது.

காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், தங்களை ஓர் அரசியல் உயர் ஜாதியினராகக் கருதிச் செயலாற்றும் இயல்பை—சுபாவத்தைப் பெற்றுவிட்டனர். அந்த இயல்பை, அவர்கள் மாற்றிக்கொள்ளுவது என்பது, அவர்களால் முடியக் கூடிய காரியமன்று.

பனிக்கட்டியை மீண்டும் நீராக மாற்றக்கூடும். நீரில் மறைந்துறையும் தீயையும் மறுபடியும் தனித்தெடுத்துக் காட்டக்கூடும். நீரின் இயல்பு அது.

அதுபோன்றே, காங்கிரஸ் கட்சித் தலைவர்களுக்கு, அரசியல் துறையில் ஏற்பட்டுள்ள ஆணவ இயல்பை, அவர்களாகக் கைவிடுவது என்பதையும் எதிர்பார்க்க முடியாது; பிறரால் கைவிடச் செய்ய முடியும் என்பதும் வீண் மயக்கே. என்றும் முடியாத ஒன்றை முடிக்க முயற்சிக்கும் பேதமைதான்!

எனவே, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்கள் எடுத்துக் காட்டும் 'நேசத்தாலும் பாசத்தாலும் பிணைக்கப்படும் மனித உறவின் தேவை'யை காங்கிரஸ் தலைவர்கள், என்றென்றும் உணரமாட்டார். இச்சிறந்த போதனையை நமக்குத் திருவாய் மலர்ந்தருளும், தேபர் அவர்களும் அனைவரிலும் மேலாக விளங்குவதாகச் சொல்லப்படும் பண்டித நேரு அவர்களும்கூட, காங்கிரஸ் தலைவர்களிடம் படிந்துவிட்டிருக்கின்ற பொது இயல்புக்குக் கட்டுப்பட்டவர்களேயாவர். எனவே, உயர்ந்தக் கருத்துக்களைக் கூறிடத்தான் அவர்களாலும் இயலுமேயல்லாது, அதைச் செயல்படுத்த அவர்களாலும் முடியாது. அவ்வுயர் கருத்தை அவர்களும் உணரமாட்டார்!

தேபர்பேசிய கூட்டத்தில் குழப்பம்

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது போலீஸ் தடியடி

லூதியானா—

பஞ்சாப் மாநிலத்திற்கு வட்டாரக் குழு அமைப்பு ஏற்பாடு செய்திருப்பது குறித்து எதிர்ப்புக் காட்டும் வகையில் இந்தமத வெறியர்கள் சிலர் காங்கிரஸ் தலைவர் தேபர் முன் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

அவர் பேசிய கூட்டம் ஒன்றில் ஜனசங் அபிமானிகள் எனக் கருதப்படுவோர் செய்த சலசலப்பினால், கூட்டம் குழப்பத்தில் முடிவுற்றதாகத் தெரியவருகிறது.

தேபர் புகைவண்டி நிலையத்திற்கு வந்தபோதுகூட, இது மாதிரி ஆர்ப்பாட்டக்காரர்கள் 'கலாட்டா' செய்தனராம். அதனால் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரரைக் கலைத்தனராம்.

ஆர்ப்பாட்டகாரர் மீது கடும் நடவடிக்கை

சௌராஷ்டிர முதன் மந்திரி கொக்கரிப்பு

ராஜ்கோட்—

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரை சௌராஷ்டிர முதன் மந்திரி வன்மையாகக் கண்டித்தாராம்.

சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவோரை ஒடுக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக கொக்கரித்தாராம், ரஸிக்லால் பரீக் என்ற அந்த முதல்வர்!

அபிவிருத்தி வரி விதிப்பிற்கு எதிராக நடைபெறும் சத்தியாக்கிரகத்தைக் குறித்தே அவர் இம்மாதிரி பேசினாராம்!

முதன் மந்திரியின் மருமகன் கைது

ஜலந்தர்—

மாநில முதன் மந்திரி பிரதாப் சிங் கெய்ரானின் மருமகன் ஒருவரைபோலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

ஜெகத் சிங் என்ற அவர், வழக்கமாக முதன் மந்திரியின் பெயரைக் கூறிக்கொண்டு தவறான வழிகளில் ஈடுபடுவாராம்.

ஒரு கொள்ளை வழக்கு சம்மந்தமாக அவர் இப்போது கைது செய்யப்பட்டதாக உதவிப் போலீஸ் தலைமை அதிகாரி தெரிவித்திருக்கிறாராம்.

முன்பு கம்யூனிஸ்டுகள்தான் இந்தக் கொள்ளையைப் புரிந்ததாகக் கருதப்பட்டதாம். ஆனால், அந்தக் குற்றச்சாட்டு இப்போது ஆதாரமற்றது என்று தெரியவருவதாயும், ஜெகத் சிங் உள்ளிட்ட பலர்தான் அந்தக் கொள்ளையை நடத்தியவர்கள் என்று தெரியவந்திருப்பதாயும் கூறப்படுகிறது.

செயற்கை ரப்பர் தொழிற்சாலையும் வடநாட்டிலேயே அமைகிறது

இலட்சுமணபுரி, ஏப். 20—

இந்தியாவிலேயே முதலாவது செயற்கை ரப்பர் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை சிக்கிரமே துவங்கப்படவிருக்கிறது.

எங்கே என்று கேட்கத் தேவையில்லை; வடநாட்டில்தானே அத்தகு தொழிற்சாலைகள் எல்லாமே நிறுவப்பட்டு வருகின்றன; அப்படியிருக்க செயற்கை ரப்பர் உற்பத்தியை மட்டும் எப்படி வேறு இடத்தில்—தென்னாட்டில் நிறுவிவிடுவார்கள்?

நிறுவப்படப்போவது உத்திரப் பிரதேசத்தில்! மொத்தமாக ரூ. 12 கோடி மூலதனச் செலவில் இத்தொழிற்சாலை நிறுவப் படவிருக்கிறதாம்.

உ. பி-யில்தான், இந்த செயற்கை ரப்பர் உற்பத்திக்குத் தேவையான சாராயம் ஏராளமாக உற்பத்தியாகிறதாம். அதனால்தான் இந்தத் தொழிற்சாலை இங்கு நிறுவப்படுகிறதாம்!

மேலும் இரண்டு இரயில்வே தொழிற்சாலைகளையும் உ. பி. யிலேயே நிறுவச் செய்வதற்கு மாநில சர்க்கார் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றனராம்.

இது போதாதென்று உ. பி. மாநிலத்தவர் மின்சார ஜனரகத் தொழிற்சாலையும் தங்கள் மாநிலத்திலேயே துவங்க வேண்டும் என்று கோரினராம்!

முதலாவது திட்டத்தில் பயன்படுத்தப்படாத நதிகள் விவரம்

புதுடில்லி, ஏப். 20—

"மின்சார முன்னேற்றத்தைப் பொறுத்தவரையில் தாமிரவருணி, பெரியாறு, சாலக்குடி, காவேரி, சர்வதி, கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி, கங்கை, சட்லெஜ் ஆகிய நதிகள் முதலாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவு வரையில் பயன்படுத்தப் படாமலேயே இருந்திருக்கின்றன.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெரிய நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களுக்கும், மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கும் மொத்தம் சுமார் 740 இலட்சம் ஏகராகன அடி நீரைப் பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது"

என்று, மத்திய ஆட்சியின் பாசன மின்சார அமைச்சர் குல்சாரிலால் நந்தா, மக்கள் சபையில் கூறியுள்ளார்.

திரு — கொச்சி தண்ணீர் விநியோகத் திட்டங்கள்

இரும்புக் குழாய்கள் இன்றி வேலை தேக்கம்

திருவனந்தபுரம்—

பொது மராமத்து வேலைகளைக் கவனிப்பதற்கு, உடனடியாகத் தேவைப்படுகிற சிமெண்ட், உருக்குப் பொருள்கள் முதலியனவற்றைக் கேட்டுப் பெறுவதற்காக திரு—கொச்சி ஆலோசகர், டெல்லிக்கு சீக்கிரமே செல்வார் என்று தெரிய வருகிறது.

டெல்லி சர்க்கார், மாநிலத்தின் உருக்குத் தேவையைப் பூர்த்தி செய்து வைக்காவிட்டால், மாநில சர்க்கார் நேரடியாக உருக்குப் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிவரும் என்று ஆலோசகர் கருதுகிறாராம்.

இரும்புக் குழாய்கள் கிடைக்காததினால், பெரும் தண்ணீர் விநியோகத் திட்டங்கள் எல்லாம் தடைபட்டுக் கிடக்கின்றனவாம்!

இனவெறியின் எதிரொலி!

கேப்டவுன், ஏப். 20—

'பஸ்'களில் வெள்ளையருக்குத் தனியிடமும், கருப்பு நிறமுள்ளோருக்கு ஓரிடமும் ஒதுக்கியதை மறுத்து நடைபெற்றுவரும் எதிர்ப்பு வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறதெனத் தெரிய வருகிறது. இதனால் கம்பெனிக்கு ஏராளமான அளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

குற்றாலம், குன்னூரில் ஓய்வு விடுதிகள்

இரயில்வே தொழிலாளருக்கு கட்டித்தரப்படும்

புதுடில்லி, ஏப். 20—

இந்தியாவில் 11 புதிய இடங்களில் இரயில்வேத் தொழிலாளர்களுக்கு ஓய்வு விடுதிகள் கட்டும் திட்டம் அரசியலாரின் பரிசீலனையில் இருப்பதாக துணை இரயில்வே அமைச்சர் ஓ. வி. அழகேசன் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய இரயில்வே குற்றாலம், குன்னூரில் அவ்விடுதிகளை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

மீன் பிடிப்பதற்கு பயிற்சி நிலையமாம்!

சென்னை, ஏப். 19—

தூத்துக்குடியில் மீன் பிடிப்புத் தொழிலுக்குப் பயிற்சி நிலையமொன்றை துவக்க சென்னை சர்க்கார் அனுமதியளித்திருக்கிறார்கள்.

சுமார் 20 மீனவர்களுக்கு 6 மாத காலத்திற்கு தூத்துக்குடியில் பயிற்சியளிக்கப்படுமாம். 20 பேரில் 15 பேர் கிழக்குக் கடற்கரையிலிருந்தும், 5 பேர் திரு—கொச்சி மாநிலத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்களாம்.

அவர்களுக்குத் தலா மாதம் ரூ. 50 உபகாரச் சம்பளமும், ரூ. 15 மாதம் உணவுப்படியும பயிற்சிக் காலத்தின்போது அளிக்கப்படுமாம்.

கல்வியில் மக்கள் சீனா காட்டும் அக்கறை

உலகில்வேறெங்கும்கிடையாதாம்

"முதல் 9 வயது சிறார்களுக்கு சீனாவைப்போல் உலகில் வேறு எங்கும் அவ்வளவு அக்கறையாக கல்வி போதிக்கப்படவில்லை,"

என்று, சி. பி. இராமசாமி அய்யர், சென்னை வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

சீனாவிலுள்ள எல்லாக் கல்லூரிகளையும், பள்ளிகளையும் சர்க்காரே நடத்துகின்றனரென்றும், மக்களுக்குக் கல்வி போதிப்பதை முக்கியப் பொறுப்பாக சர்க்கார் ஏற்றிருக்கின்றனரென்றும் அவர் கூறினார்.

'1948-ல் இருந்த சீனாவுக்கும், இன்றுள்ள சீனாவுக்கும் மிகவும் வியக்கத்தக்க மாறுதல் ஏற்பட்டுள்ளது' என்று சுட்டிக் காட்டினார்.

மணவிலக்கு செய்து கொள்ளுமாறு!

கணவனுக்கு மனைவி யோசனை

தன்னிடமிருந்து தன் கணவனை மணவிலக்கு செய்து கொள்ளுமாறு கோரியதுடன், மறுமணம் செய்து கொள்ளுமாறும்ஒருநடிகை யோசனை கூறினாராம்.

நாராயண கேவல் சிங் என்பார், ஷீலாபதம் சந்த் ரமணி என்ற பம்பாய் நடிகையின் கணவர்; 1952 அக்டோபரில் இருவரும் தம்பதிகளாயினர்.

ஆனால் மணவாழ்க்கை நடத்தவில்லை என்று இருவருமே கூறுகின்றனராம்.

அதனால், கோரியபடி, கேவல் சிங் தனது மனைவியிடமிருந்து மணவிலக்குப் பெற்றுக்கொள்ள அனுமதியளித்துத் தீர்ப்பு வழங்கினாராம், அகமதாபாத் நகர நீதிபதி!

நாகர்கள் கிளர்ச்சி கண்டு கிலி!

எல்லா மாநிலப் போலீசாருக்கும் எச்சரிக்கை

சென்னை, ஏப். 20—

நாகர்கள் சுதந்திரம் கோரி ஈடுபட்டிருக்கும் மகத்தான கிளர்ச்சி, ஆட்சியாளருக்கு எத்தனை கலக்கத்தைத் தந்திருக்கிறது என்பதை அவர்களது ஆர்ப்பாட்டமான நடவடிக்கைகள் கூறுகின்றன.

நாகர்கள் தங்கள் தாயகத்தை விடுத்து இந்தியாவின் இதர மாநிலங்களில், உள்ள மலைப் பகுதிகளில் குடியேறி விடுவதாகவும், ஆகவே, அதைத் தடுக்க எல்லா மாநிலப் போலீசாரும் உஷாராக இருக்க வேண்டும் என்றும் டெல்லி சர்க்கார், மாநில சர்க்கார்களுக்கு சுற்றறிக்கைஅனுப்பியிருப்பதாகத் தெரிய வருகிறது.

சென்னை சர்க்காருக்கு அந்த சுற்றறிக்கை கிடைத்துவிட்ட தகவல் உறுதி செய்யப்படாவிட்டாலும், போலீசாருக்கு முன்னெச்சரிக்கை அனுப்பப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது

நாகர்களை அடையாளம் காணுவது எப்படி என்பதில் சென்னை போலீசாருக்கு கஷ்டம் இருப்பதாகவும், நாகர்கள் சிலரின் 'போட்டோ'க்கள் வரவழைக்கப்படுவதாகவும் விசாரித்ததில் தெரியவருகிறது.

★

'சுதந்திர நாக நாடு'

அங்கீகாரம் பெற தூதுக்குழு பாகிஸ்தான் செல்கிறது?

கராச்சி, ஏப். 20—

நாக நாடு சுதந்திரமடைந்து விட்டதென்று தாங்கள் கடந்த திங்களில் பிரகடனம் செய்துள்ளபடி, நாக நாடு சுதந்திரம் பெற்றதை அங்கீகரிக்க வேண்டுமென்று பாகிஸ்தான் சர்க்காரைக் கோருவதற்காக, நாகர் நல்லெண்ணத் தூதுக் குழு ஒன்று பிஜோ தலைமையில், கராச்சி வருவதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தூதுக்குழுவினர், பர்மா, இலங்கை, நேப்பாளம் முதலிய நாடுகளுக்கும் செல்வர் என்று தெரியவருகிறது.

இம்மாதிரி ஒரு தூதுக் குழு கராச்சி வருகிறது என்ற செய்தியை பாகிஸ்தான் வெளிவிவகார இலாகாவினர் மறுக்கவில்லை என்றும், தங்கள் சுதந்திர நாட்டிற்கு அங்கீகாரம் பெற நாகர்கள் மேற்கொண்டிருக்கிற முயற்சி பற்றித் தெரியாது என்றும் கூறினராம்.

★

நாகர்களின் தீவிர நடமாட்டம்

டில்லி சர்க்கார் கவலை

அசாம் மேல் பகுதியில், இங்கிருந்து 35 மைல் தொலைவில் உள்ள நாகர் சாதியா பிரதேசத்தில் நாகர்களின் தீவிரமான நடமாட்டம் இருந்துவருவதாகவும், கடந்த செவ்வாயன்று நாகர்கள், நாகர்சாதியா கடைத் தெருவில் புகுந்து கலாட்டா செய்ததாகவும் செய்தி ஒன்று கூறுகிறது

ஆனால், இப்படி ஒரு 'தாக்குதல்' நடைபெறவில்லை என்று லகீம்பூர் போலீஸ் அதிகாரி தெரிவித்திருக்கிறார் என்றும் வேறொரு செய்தி கூறுகிறது.

நாகமலைப் பிரதேசத்தை அடுத்துள்ள எல்லா இரயில் நிலையங்களிலும் போலீசார் காவல் வைக்கப் பட்டுள்ளனர் என்றும், சந்தேகத்திற்கு ஆளாகிற எல்லா நாகர்களும கைது செய்யப்படுகின்றனர் எனறும் கூறப்படுகிறது.

இப்போது விடுதலை கோரும் நாகர்களின் நடமாட்டம் தீவிரமாகியிருப்பது போலவே, போலீஸ் இராணுவம் ஆகியவையும் தீவிரமான வேட்டையிலீடுபட்டிருப்பதையும் குறித்த செய்திகள் சிறிதளவுமட்டுமே கிடைத்து வருகிறது.

10,000 பேருக்கு வேலை தர முயற்சி

தென்னை நார் உற்பத்தி அதிகரிப்புத் திட்டம்

மேலும் 5,500 டன் தென்னமட்டை நார் உற்பத்தி செய்வதின் மூலம் மேலும் 10,000 பேருக்கு வேலை தர முடியும் என்பதால், அதற்கான திட்டம் ஒன்றை இரண்டாம் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென, இந்திய தென்னை நார் போர்டார் சர்க்காரைக் கேட்டுள்ளார்களாம்

இந்தத் தொழிலுக்கான சட்டம் ஒன்று கடந்த செப்டம்பர் திங்கள் 30-ந் தேதியன்று நிறுவப்பட்டது; அந்தச் சட்டம் அமுலாகும் விதம், தென்னை நார் போர்டின் வேலை நிலைகள் ஆகியவை பற்றிய அறிக்கை ஒன்று மக்கள் சபையில் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரால் தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில்தான் மேற்கண்ட திட்டம் பற்றிய விவரம் தரப்படுகிறது.

எர்ணாகுளத்தருகே கலாமசேரி எனுமிடத்தில், தென்னை நார் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று நிறுவவும் ஏற்பாடாகியுள்ளது என்றும், இதற்கு சுமார் ரூ. 13 லட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும், இதேபோல ஒரு ஆராய்ச்சிக் கழகம், மாதிரித் தொழிற்சாலை ஒன்றுடன் கல்கத்தாவில் நிறுவவும் ஏற்பாடாகியிருப்பதாகவும் தெரியவருகிறது

எண்ணெய் கிடைக்குமா என்பதை ஆராய!

ரூ. 30 கோடி ஒதுக்குமாறு ரஷ்ய நிபுணர்கள் சிபாரிசு

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சென்னை, உத்திரப் பிரதேசம், வங்காளம், கம்பே, ஜெயசால்மீர், பஞ்சாப் ஆகிய பகுதிகளில் மண்ணெண்ணெய் கிடைக்குமா என்பதைக் கண்டு பிடிப்பதற்கான ஆராய்ச்சிக்காக ரூ. 30 கோடி ஒதுக்குமாறு ரஷ்ய மண்ணெண்ணெய் நிபுணர்கள் இந்திய சர்க்காருக்கு யோசனை கூறியுள்ளனராம்.

கழகச் செய்திகள்

ஆனகாபுத்தூரில் தி.மு.க. பொதுக்கூட்டம்

17—4—56ல், ஆனகாபுத்தூரில், தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் தோழர் எம். கல்யாணசுந்திரம் தலைமையில் நடைபெற்றது. கழகச் செயலாளர் தோழர் ஆர். புரட்சிமணி அனைவரையும் வரவேற்று, கழகம் இதுகாறும் சாதித்துள்ளவைகளை விளக்கிப் பேசினார். தோழர் சி. ராமலிங்கம் கைத்தறி நெசவாளர்களின் தற்கால நிலையையும், அரசாங்கத்தினர் கொள்கையையும், அதனால் நெசவாளர் வாழ்க்கை பாதிக்கப்படுவதையும் விளக்கிப் பேசினார்.

பின்னர், தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு. கழகம் தொழிலாளர் நலனில் கொண்டுள்ள அக்கறையையும், தற்போது அரசாங்கத்தார் கழகத்தை எந்த அளவுக்கு நினைக்கின்றார்கள் என்பதைக் குறிப்பிட்டும் பேசினார்

இறுதியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திராவிட நாடு இலட்சியத்தை எடுத்துக் கூறியும், மாநில மாநாட்டின் வெற்றிக்கு ஒத்துழைக்க வேண்டியும் பேசினார்.

ஆனகாபுத்தூர் வீதிகளெல்லாம் தோரணங்களாலும், மின்சார விளக்குகளாலும் அலங்கரிக்கப் பட்டு இருந்தது. இதுவரை எந்த அரசியல் கூட்டங்களுக்கும் இல்லாத அளவு பெருங்கூட்டம் கூடியிருந்தது.

மணப்பாறை தி. மு. கழகம்

13—4—56 அன்று மணப்பாறை பழைய சந்தைத் திடலில், தோழர் மா. இளங்கீரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கதிரேசன் இயக்கப் பாடல் பாடினார். தோழர்கள் காசிநாதன், சிறுவன் மணிமாறன், மணவை பொ. மதிவாணன், என் வடிவேலன், என். சக்ரபாணி ஆகியோர் பேசிய பின்னர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி 'இன்றைய சமுதாயமும், தமிழ் நாடும்' என்பது பற்றி விளக்கமாக சொற்பொழிவாற்றினார்.

புதுவை - இலாசுபேட்டை தி. மு. கழக ஆண்டு விழா

15—4—56 மாலை 7 மணியளவில், கழக 2-வது ஆண்டு விழா, தோழர் சி. ப. குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ச. சிவப்பிரகாசம், கோ. பாண்டியன், செ. கோவிந்தராசன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

பழையகூடலூர் தி. மு. க. துவக்க விழா

மாயூரம் வட்டம் பழைய கூடலூர் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 14—4—56ல் தோழர் இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கோ. சி மணி, என். இட்டப்பா, ஏ. வி பி. ஆசைத்தம்பி ஆகியவர்கள் கழகக் குறிக்கோள் பற்றி விளக்கவுரையாற்றினர்.

அவர் கண்ட உண்மை!

'நர்ஸ்' தொழில் மேன்மையான தொழில் என்றும், இளம் பெண்கள் இதை மேற்கொள்ள வேண்டுமென்றும், கல்விமுறை சீர்திருத்தி அமைக்கப்பட்டால் பெண்களுக்கு 'நர்சிங்' தொழில் கட்டாய பாடமாக்கப்படுமென்றும் அமைச்சர் சுப்பிரமணியம் மங்களூரில் கூறியுள்ளார்.

முகவரி மாற்றம்

சென்னை — 48-வது வட்ட தி. மு. கழகம் 1—4—56 முதல் ஜோன்ஸ் ரோடு, எண் 47 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

சேலம் 19-வது வட்ட தி. மு. கழகம்

16—4—56 இரவு 9 மணிக்கு கழகச் செயற்குழுக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்ற போது, மாநில மாநாட்டிற்கு தோழர்கள் கே. ஏ இராமய்யா, எம் எஸ். வி. பதி ஆகிய இருவரும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். பின்னர், 13—1—56 முதல் 16—4—56 வரை உள்ள வரவு-செலவு கணக்குகளை பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப் பட்டது.

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகம்

8—4—56 மாலை 46-வது வட்டப் பிரதிநிதியும், இராமநாதபுரம் மாவட்ட தேவகோட்டை நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் இராம. வெள்ளையன் அவர்கட்கு உறுப்பினராக நின்று வெற்றி பெற்றதை முன்னிட்டு கழகச் சார்பில், தோழர் இரா. அசமழகன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. அது போது தோழர்கள் பலர் பாராட்டிப் பேசினர். தோழர் இராம. வெள்ளையன் பாராட்டியோருக்கு நன்றி தெரிவித்துப் பேசினார்.

A. மேட்டூரில் தி. மு. க. துவக்க விழா

பெரம்பலூர் வட்டம் ஏ. மேட்டூரில், 18—4—56 மாலை 6 மணிக்கு தி. மு. கழக துவக்க விழா திருச்சி தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. தோழர் அ பொன்னம்பலனர் கழக இலட்சியங்கள் பற்றி விரிவுரையாற்றினர்.

கொலாபா—பம்பாய் தி. மு. கழகம்

11—4—56 இரவு 9 30 மணியளவில், கூப்ரேஜ் திடலில், தோழர் எஸ் கே ராஜூ தலைமையில், கழக உறுப்பினர்களின் மாதாந்திர கூட்டம் நடைபெற்ற போது கழக வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது, பின்னர், சொற்பயிற்சி மன்றம், செயலாளராக தோழர் கே கே. இராமநாதன் அவர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

கரூர் நகர தி. மு. கழகம்

18—4—56 இரவு 9 மணியளவில், கழகச் செயற்குழுக் கூட்டம், கருணாநிதி கலை மன்றத்தில் நடைபெற்றபோது, மாநில மாநாட்டுப் பிரதிநிதியாக தோழர் என். ஆர். இராமசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சூரக்குடியில் தி. மு. கழகத் துவக்க விழா

8—4—56 மாலை 7 மணிக்கு, கச்சேரி மைதானத்தில், தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா தோழர் முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர் பழ. குப்பான்அம்பலம் விழாவைத் துவக்கி வைத்தார். தோழர் என். எஸ். இராசா கொடியேற்றி வைத்தார். தோழர்கள் மணிமாறன், சி. மெய்யப்பன், ம. முத்தழகு, கா. பழனிசாதன், மு. வசனப்பித்தன், கே. எஸ். சந்தானம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

அனுதாபம்

"சென்னை — இராயப்பேட்டை தோழர் ஆ கோ. அரசு அவர்களின் செல்வன் அறிவழகன் இயற்கை யெய்தியமைக்கு 37-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வேடிக்கையுமல்ல— விசித்திரமுமல்ல!

சென்னை, ஏப் 20—

ஓடும் பஸ் நின்றுவிட்டால், உடனே, போக்கு-வரத்து இலாகா அலுவலகத்திற்கு தகவல் தர ஒவ்வொரு வண்டியிலும் கம்பியில்லாத் தந்தி இயந்திரம் பொருத்த சர்க்கார் யோசித்து வருகிறார்களாம்.

லண்டன், பர்மிங்ஹாம், மாஞ்செஸ்டர் நகர பஸ்களில் இந்த ஏற்பாடு உள்ளதாம். பம்பாயில் இந்த வசதி சீக்கிரமே செய்து தரப் படவிருக்கிறதாம்.

இது தவிர, இப்படி ஒவ்வொரு வண்டியிலும் கம்பியில்லாத் தந்தி இயந்திரங்கள் பொருத்துவதைவிட, முக்கியமான பஸ் நிற்குமிடங்களில் டெலிபோன் வசதி செய்து தந்தால் போதாதா என்பது குறித்தும் சர்க்கார் யோசிக்கிறார்களாம்

ஓட்டை வண்டிகள் ஓடும் போதே நின்றுவிட்டால், அவற்றிற்குப் பதிலாக மாற்று வண்டி கொண்டுவர சர்க்கார் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் வேடிக்கையானவையாக இருக்கின்றன.

திறமையே திறமை!

டிக்கட் இன்றியோ, அல்லது 'பாஸ்' இல்லாமலோ இரயில் பிரயாணம் செய்ததாக 1955-ம் ஆண்டில் 73,64,919 பேர் கண்டு பிடிக்கப்பட்டனராம்!

இவர்களிடமிருந்து இரயில் கட்டணத் தொகையாகவும், அபராதமாகவும் ரூ. 1,44,53,257 வசூலிக்கப்பட்டதென்று மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட வரலாற்றில் ஒரு திருப்புமுனை!

★ திராவிடம் வளம் பெறவும்
★ திராவிடர் நலம் பெறவும்
★ அதற்கான திட்டம் தீட்டி செயல்படுத்தவும்

மே 17, 18, 19, 20 தேதிகளில்

திருச்சி

பந்தயத் திடலில்

('ரேஸ் கோர்ஸ்' ஜமால் முகம்மது கல்லூரி அருகில்)

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

நடைபெறும்

★

பொதுச் செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கள் அனைவரும் நாட்டு விடுதலை குறித்து நல்லுரை ஆற்றுவர்

★

எழுச்சியூட்டும் நாடகங்கள்—இன்னிசை விருந்து—ஓவியக் காட்சி ஆகிய சிறப்புகளும் உண்டு

★

திரண்டு வாரீர் தோழர்களே!

—வரவேற்புக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மக்கள் தொகை அடிப்படையில் கனரகத் தொழில்களை நிறுவக்கூடாதாம்!

பொருளியல் பொருத்தம் கொண்டே நிர்ணயிக்க வேண்டுமாம்!

தென்னகம் வஞ்சிக்கப்பட்டுவருவதற்கு - கிருஷ்ணமாச்சாரியார் கண்டு கூறும் காரணம்!

தார்வார், ஏப். 21—

"கனரகத் தொழில்களைத் துவங்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பதில், மக்கள் பெருக்கத்தை ஒரு அடிப்படையாகக் கொண்டு முடிவு கட்டுவது என்பது ஒழுங்கானதல்ல. ஆனுல், சிறந்த பொருளாதாரப் பொருத்தத்தை ஒரு பொருட்டாகக் கொண்டு, அப்பிரச்சினையை ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டும். எனவே, குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காகவே, இராஜ்யங்கள் அனைத்திலும் கனரகத் தொழில்களை இந்திய அரசாங்கம் துவங்காது."

இவ்வாறு, வர்த்தக-தொழில் மந்திரியான கிருஷ்ணமாச்சாரியார் கூறியுள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசும்பொழுது குறிப்பிட்டதாவது :—

"தாங்கள் எந்த மொழிவழியைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கருதாது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, தங்களால் இயன்ற உதவி முழுவதையும் மக்கள் தர முன்வர வேண்டும். எல்லா நிலையிலும், இந்தியர் எனத் தங்களை எண்ணி, முழு நாட்டையும் வளமுடையதாக்க மக்கள் முயல வேண்டும்."

"தொழில்மயமாக்குவதற்கு அமெரிக்காவிற்கு ஐம்பது ஆண்டுக் காலம் தேவைப்பட்டது. அதே பணிக்கு ரஷ்யாவிற்கு முப்பத்தைந்து ஆண்டுக் காலம் தேவைப்பட்டது. ஆனுல், இந்தியாவோ தன்னைப் பதினைந்தே ஆண்டுக்குள்ளாகத் தொழில்மயமுள்ளதாக ஆக்கிக்கொள்ளப் பேரவா கொண்டிருக்கிறது."

"நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் தொழில் அளிப்பதுதான், திட்டமிட்டத் தொழில் ஏற்பாட்டின் மூலக் கோட்பாடாகும். நாட்டை முழு அளவில் தொழில்மயமாக்குவதினுல்தான், அம்மூலக் கோட்பாட்டை வெற்றி பெறச் செய்ய முடியும்."

பூசுவாமிகள் 'கிளர்ச்சி'

96 ஊழியர்கள் கைது

ஜாகீர் ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்து மீண்டும் நடவடிக்கை

ஜெயப்பூர், ஏப். 21—

இராஜஸ்தான் சர்க்காரின் ஜாகீர் ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்து 'பூசுவாமி சங்க'த்தவர் மீண்டும் தங்கள் 'சத்தியாக்கிரக'த்தைத் துவங்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

கடந்த எட்டுநாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தக் கிளர்ச்சி, மீண்டும் இப்போது துவங்கியுள்ளதாம்.

144 தடையுத்தரவை மீறி 'சங்க ஊழியர்'கள் ஆர்ப்பாட்டம் செய்தனராம்.

கடந்த ஏப்ரல் 12-ல், இராஜப் பிரமுகர், இந்தத் தகராறுக்கு நியாயம் கூறுவதாகத் தெரிவித்ததின் பேரிலேயே கிளர்ச்சி நிறுத்தப்பட்டதென்றும், அவரது பேச்சு வார்த்தைகள் பலனற்றுப் போய்விட்டன என்றும், எனவேதான் மீண்டும் கிளர்ச்சி என்றும் கூறப்படுகிறது.

ஜாகீர் ஒழிப்புச் சட்டத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 5,000-த்திற்குக் குறைவான நில வருமானமுடையோருக்கு விதி விலக்கு அளிக்கவேண்டும் என்று இந்த 'பூசுவாமி'கள் கோருகின்றனராம்.

நேற்று மட்டும் இரவு 10 மணி வரை சுமார் 96 தொண்டர்கள் கைதாகியுள்ளனராம்.

காலமறிந்த உதவி !

ஐதராபாத், ஏப். 21—

மூன்று குழந்தைகளை ஒரே பிரசவத்தில் பெற்றெடுத்த யசோதா என்ற 32 வயது நிரம்பிய மங்கைக்கு ஐதராபாத் அரசினர் ரூ. 150 பரிசாகத் தந்துள்ளனராம். பரிசுத் தொகை ஒரு பசுவை வாங்கவே தரப்பட்டதாம். பிறந்துள்ள குழந்தைகள் யாவும் பெண்களாம்.

இப்பொழுதுதான் தெரிந்துகொண்டாரா ?

"பள்ளிக்குச் செல்லும் வயது நிரம்பிய குழந்தைகள் எல்லோரும் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டுமென்றுல், அவர்களுக்குப் பகல் உணவு தர ஏற்பாடு செய்வது அவசியமாகும் ; கிராமங்களில் இதைச் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகும் ; இதற்கான அதிகத் தொகைக்கு எப்படியாவது வழி செய்தாகவேண்டும்," என்று, முதலமைச்சர் காமராசர், சென்னை டி. டி. வி. உயர்நிலைப்பள்ளியின் 101-வது ஆண்டு விழாவில் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறியுள்ளார்.

சென்னை மாவட்டத்திற்கா இவ்வளவு பெரிய திட்டம்?

சென்னை, ஏப். 20—

தேக்குபோன்ற மரங்களை நதி ஓரங்களிலும், தண்ணீர் வசதியுள்ள மற்ற இடங்களிலும் வளர்ப்பது சம்மந்தமான ஒரு திட்டத்தை சென்னை சர்க்கார் நடத்தி வைப்பார்களாம்.

4,800 ஏக்கராவில், மேட்டுப் பாளையம் பகுதியில் தேக்கு மரம் வளர்க்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம் !

பாலாறு, பெண்ணுறு, காவேரி, தாமிரவருணி, வைகைபோன்ற பெரிய நதிக்கரை ஓரங்களில் தேக்குமரம் வளர்க்கப்படுமாம்.

மின்சார இரயில் எஞ்சின் உற்பத்தி

இந்தியாவிலேயே தயாரிக்க தீவிர பரிசீலனையாம்

இந்தியாவிலேயே மின்சார இரயில் எஞ்சின்களைத் தயாரிப்பது பற்றி இரயில்வே இலாகா தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறதாம் !

உத்தேசிக்கப்பட்டுள்ள கனரக மின்சாரத் தொழிற்சாலை நிறுவப்பட்டால்தான் இந்த யோசனை சாத்தியமாகுமாம் !

இரண்டாவது திட்ட காலத்தில் 1,430 'பிராட்கேஜ்' என்ஜின்களும், 353 'மீட்டர்கேஜ்' எஞ்சின்களும் தேவையாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

படித்துவிட்டு வேலை தேடி அலைபவர்கள்

கூட்டுறவு முறையில் குடிசைத் தொழிலில் ஈடுபட வேண்டுமாம் !

அலகாபாத், ஏப். 22—

"படித்தவர்கள் ஒன்றுசேர்ந்து தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம் ; வேலைத் தேடி அலைவதற்குப் பதிலாக அவர்கள் கூட்டுறவு முறையில் குடிசைத் தொழிலில் ஈடுபடலாம். இரண்டாண்டு காலத்திற்குள் ஒவ்வொருவராலும் மாதம் ரூ. 200 சம்பாதிக்க முடியும்,"

என்று, மத்திய சர்க்காரின் இயற்கை வளம், விஞ்ஞான ஆய்வு இலாகா அமைச்சர் கூறியுள்ளார்.

ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வர் ?

தூத்துக்குடி, ஏப். 21—

தூத்துக்குடி ஆர்வி ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்து நிர்வாகத்தினருக்கு அறிக்கை தந்துள்ளனராம்.

4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனரென்றும், பல்வேறு இலாகாக்களிலும் நிர்வாகத்தினர் வேலைச்சுமையை அதிகரிக்க முயன்றதன் விளைவே இம்முடிவுக்குக் காரணமென்றும் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கோலார் தங்கச் சுரங்க நஷ்ட ஈடு தகவல்

புதுடில்லி, ஏப். 21—

கோலார் தங்கச் சுரங்கங்களை தேசியமயமாக்குவதற்கு நஷ்ட ஈடாக ரூ. 80 இலட்சம் கொடுக்க மைசூர் அரசியலார் முன்வந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மாநில சர்க்காருடன் பேரம்பேசி வரும் 'கம்பெனி டைரக்டர்'கள் முதலில் ரூ. 6 கோடி நஷ்டஈடு கேட்டதாகவும், பின்னர் அதைக் குறைத்துக்கொண்டு, தற்போது ரூ. 2 கோடி கேட்பதாகவும் தெரியவருகிறது.

கோலார் தங்கச் சுரங்கங்களிலிருந்து 1954-ம் வருடத்தில் 2,20,522 'அவுன்ஸ்' தங்கம் எடுக்கப்பட்டது. சுரங்கத்தின் ஆழம் தற்போது 9,000 அடிக்குமேல் போய்விட்டது.

சென்னை கைத்தறித் துணிகள் மீது நாட்டம் !

அமெரிக்க மக்களின் விருப்பம்

நியூயார்க், ஏப். 20—

சென்னையிலிருந்து அமெரிக்க வியாபாரிகள் இவ்வாண்டு 5 இலட்சம் கெஜம் கைத்தறி 'லுங்கி'களை வாங்குவார்களென்று அமெரிக்கப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றனவாம் !

'லுங்கி'த் துணிகள் அமெரிக்கர்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறதாம்.

மாக்கிரிகர் என்ற பெரிய துணி வியாபாரிகள் சென்னை துணியில் $1\frac{3}{4}$ இலட்சம் கெஜத்திற்கு ஆர்டர் கொடுத்துள்ளார்களாம்.

துரித நடவடிக்கை எடுப்பார்களாம் !

கள்ளிக்கோட்டை, ஏப். 22—

உணவுப் பொருட்களின் விலையை நியாயமான அளவுக்குக் கொண்டுவர சர்க்கார் துரிதமாக நடவடிக்கைகள் எடுக்குமென்று மத்திய துணை உணவு அமைச்சர் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார்.

புத்தர் விழாவை முன்னிட்டு மரண தண்டனைகள் ஒத்திவைக்கப்படுமா ?

புதுடில்லி, ஏப். 21—

'புத்த ஜெயந்தி விழாவை முன்னிட்டு, தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படாமல் ஒத்திவைக்கப்படுமா ?' என்று கேட்டபோது, இல்லை என்று பதிலுரைத்திருக்கிறுர், மக்கள் சபையில் மந்திரி தத்தார்.

இலங்கை சர்க்கார் ஏற்கனவே இப்படிச் செய்திருப்பதும் மந்திரிக்குச் சுட்டிக்காட்டப்பட்டதாம்.

'புத்தர் விழாக் குழுவினரிடமிருந்து அதுமாதிரிக் கோரிக்கை வந்ததா ?' என்றும் கேட்கப்பட்டிருக்கிறது.

மந்திரி பதிலளிக்கையில், ஆண்டு ஒன்றுக்கு 9,000 கொலைகள்வரை நடைபெறும்போது இங்கு, மரண தண்டனையை ஒத்திவைப்பது விவேகமானதோ, தேவையானதோ அல்ல என்றும், மரண தண்டனையை ஒழித்துவிட்ட இங்கிலாந்தில்கூட இவ்விவகாரத்தில் வேறுபட்ட கருத்துக்களிருப்பதாயும் மந்திரி தெரிவித்திருக்கிறுர்.

14,000 தொழிலாளர் ஈடுபட்ட வேலைநிறுத்தம்

84 நாட்களுக்குப் பிறகு முடிவுற்றது

நாகபுரி, ஏப். 21—

14,000 தொழிலாளர்கள் கடந்த 84 நாட்களாக ஈடுபட்டிருந்த வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவுற்றிருக்கிறது.

வேலைநிறுத்தம் முடிவுற்றாலும் வேலை துவங்க 48 மணி நேர அவகாசமேனும் வேண்டுமென ஆறு ஆலைகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கூறிவிட்டனர்.

'ராஷ்ட்ரீய ஆலைத் தொழிலாளர் சங்கம்' என்ற தேசியத் தொழிற்சங்க காங்கிரசைச் சேர்ந்த சங்கமும், ஆலை நிர்வாகிகளும் செய்துகொண்ட இரு ஒப்பந்தங்கள் செல்லத் தகாதவை—பயனற்றவை என்று நாகபுரி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்பே, தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டனர் என்றும் தெரியவருகிறது.

இளங்கோவடிகள் விழா

24—4—56 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு சென்னை அரண்மனைக்காரன் தெரு, செயின்ட் மேரி மண்டபத்தில், மேற்படி விழா நடைபெறும். டாக்டர் மு. வரதராசனுர் தலைமை வகிப்பார். திரு. பி. டி. இராசன் எம்.எல்.ஏ., டாக்டர் உ. வெ. சாமிநாதய்யர் படத்தைத் திறந்து வைப்பார். திருவாளர்கள் கி. வா. ஜெகன்னுதன், ம. பொ. சிவஞானம், கா. மு. ஷெரீப் ஆகியோர் பேசுவர். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை விழாவில் பங்கேற்பார். தோழர் எஸ் சி. கிருஷ்ணன், தோழியர் ஏ. பி. கோமளா இசை விருந்தளிப்பர்.

'தூக்கு மேடை'—நாடகம்

25—4—56 இரவு 9-30 மணியளவில், குன்னிப்பாளையம் அண்ணு அரங்கில், கண்ணீர்த்துளி நாடக மன்றத்தாரின் 'தூக்கு மேடை' நாடகம் நடைபெறும்.

சென்னை 37-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்களுக்கு :

25—4—56 இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாத வரவு-செலவு கணக்கு, ஆண்டு விழாக் கூட்ட வரவு-செலவு கணக்கு சரிபார்த்தல், மாநில மாநாட்டுக்குப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தல் ஆகியவை ஆய்வுக்குவரும்.

வடசென்னை தாளமுத்து—நடராசன் முன்னேற்ற மன்றம்

24—4—56 இரவு 8-30 மணியளவில், மன்றப் பணிமனையில், தோழர் இ. அன்பானந்தன் தலைமையில் மன்றச் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

பொதுமக்களுக்கு இராணுவப் பயிற்சி

குறிக்கோள் பற்றி விளக்கம்

புதுடில்லி, ஏப். 21—

நகரங்களில் வதியும் பொதுமக்களுக்கு வார இறுதியில் இனி இராணுவப் பயிற்சி அளிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாம். நடைமுறையில் சென்னை, இலட்சுமணபுரி, அம்பாலாவில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு நல்லொழுக்கமும், தன்னம்பிக்கையும் உண்டாக்குவதே பயிற்சியின் குறிக்கோளென அதிகார வட்டாரங்கள் கருத்தறிவிக்கின்றனவாம்.

உடற்பயிற்சி, துப்பாக்கி உபயோகம், பள்ளம் தோண்டுதல் ஆகியவற்றில் பயிற்சித் தரப்படுமாம்.

சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் 4 மணி நேரம் இப்பயிற்சி அளிக்கப்படுமாம் !

மனக்கோட்டை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான ஒற்றுமை ஏற்படும் போது, மாநில எல்லைகளைத் திருத்தி அமைக்குமாறு எவரும் கோஷம் எழுப்பமாட்டார்கள். அந்தநிலை வந்துவிட்டால், இந்தியாவை எவராலும் அசைக்க முடியாது. எவரும் இந்தியா மீது கைவைக்கமாட்டார்கள் "— என்று !

'நாமெல்லாம், ஒரு பெரும் அணுயுக, தொழிற் புரட்சி மலரும் காலத்திலிருக்கிறேம். உலகமே ஒன்றுபட வேண்டும். ஒரே உலகம் என்றெல்லாம் பேசுகிறேம். அப்படியிருக்கும்போது, 'எமது மொழி—எமது மாநிலம்' என்று பேசுவது எப்படிச் சரியானதாகும் என்பது எனக்குப் புரியவில்லை" என்று வேறு பேசியிருக்கிறுர், நேரு !

"மொழி, மாநிலம் என்பவை முக்கியமானவைதான். ஆனுல், இந்தியாவின் ஒற்றுமையை மறந்துவிடுகிறஅளவுக்கு அவை முக்கியமானவையாக முடியுமா ?" என்று கேள்வி வேறு கேட்டாராம், நேரு !

இவர் இப்படித் தெரிவித்து வரும் கருத்துக்களில், 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பில், வடநாட்டு ஏகாதிபத்தியம் தழைத்தோங்க வேண்டுமென்ற அவரது உள்நோக்கம் புதைந்திருக்கிறது தெளிவாகத் தெரியாமல் இல்லை—தென்னுட்டவருக்கு !

இந்தியாவை ஒரே நாடாக்கிவிட அந்தப் பெரிய மனிதர் மேற்கொண்டுள்ள முயற்சி எத்தனை பரிதாபத்திற்குரிய தோல்வியைச் சந்திக்கப் போகிறதோ ?

தம்மனக் கோட்டை இடிந்து விழும்போது, எவர்தான்—அதுவும் பெரிய மனிதர்களாக இருப்போர்—அழாமலிருப்பர் !

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.